**மட்டக்களப்பு மாநகர சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 19 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுலை 15 ஆம் ஆண்டு ஆந் திகதியன்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 ஆம் ஜுன் 19 ஆம் திகதியன்றும் மாநகர முதல்வருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் கழந்துறையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் தாக்கத்திற்கு ஏற்ப நிதிக்கூற்றுக்களில் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் மட்டக்களப்பு மாநகர சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றிலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 பாதகமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு உரித்தான அசையா சொத்துக்களான காணிகள், கட்டிடங்கள் என்பவற்றின் திரண்ட பெறுமதியானது நிதிக்கூற்றுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களின் திரண்ட பெறுமதியானது நிதிக்கூற்றுகளிள் காட்டப்பட வேண்டும். | காணி, கட்டடம் மற்றும் வீதிகளுக்கான பெறுமதிகள் இதுவரை காலமும் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்படவில்லை. இனிவரும் காலங்களில் படிப்படியாக ஒரு குழு மூலம் இவற்றுக்கு பெறுமதியிடப்பட்டு நிதிக்கூற்றில் கொண்டுவரப்படும். |
| (ஆ) | இயந்திரங்கள், வாகனங்கள், தளபாடங்கள், பொருத்துகள் மற்றும் நூலக புத்தகங்கள் என்பவற்றின் திரண்ட கிரயப்பெறுமதியாக ரூபா 261,784,806 தொகை காணப்பட்ட போதிலும், அவற்றிலிருந்து ஏல விற்பனை மூலம் அகற்றல் செய்யப்பட்ட சொத்துக்களின் கிரயப்பெறுமதி இத்தொகையிலிருந்து அகற்றி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அதற்றப்பட்ட சொத்துக்களின் கிரயப்பெறுமதிதிரண்ட பெறுமதியாள் அகற்ற வேண்டும். | இது வரை காலமும் இவற்றை மதிக்கப்பட்டு சீர் செய்ய படாமையால் ஏல விற்பனை மூலம் அகற்றல் செய்யப்பட்ட சொத்துக்களின் கிரயப்பெறுமதி அரிய முடியவில்லை. இனிவரும் காலங்களில் குழு மூலம் இவற்றை பெறுமதியிட்டு ஏலவிற்பனை செய்யும் போது அதன் கிரயப்பெறுமதி கழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| (இ)மீளாய்வாண்டில் எவ்வித வேலை/ வழங்கல்/ சேவை/ பண்டம் ஒன்றையும் பெற்றுக்கொள்ளாத இனங்காணப்பட்ட 12 நிகழ்வுகளின் சென்மதி ரூபா 31,986,900 தொகையில் ரூபா 16,281,020 தொகை இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக கொடுத்து தீர்க்க வேண்டிய கடப்பாடு இன்றி காட்டப்பட்டுள்ளது. | எதிர் காலத்தில் திருத்தப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் எழாதிருக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) Double cab வாகனம் மற்றும் பஸ்வண்டி என்பவற்றின் கொள்வனவு கிரயம் ரூபா 14,008,572 சபை நிதியை பயன்படுத்தி கொள்வனவு செய்யப்படுவதாக மூல ஆவணங்களில் குறிப்பிடப்படுகின்ற போதிலும், இத்தொகை மூலதன செலவீட்டிற்கான அறசிறை உதவி தொகைக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக வாகனங்களுக்காக கனக்கு வைக்க வேண்டும். | வாகனங்களுக்கான கிரயம் 14 மில்லியனும் சபை நிதிமூலம் கொள்வனவு செய்யப்பட்டாலும் இவை சபைக்கு சொத்தாக காணப்படுவதாலேயே குறித்த வாகனக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு சொத்து கூட்டிக் காட்டப்படுவதுடன் மூலதனச் செலவீட்டிற்கான அரசிறை உதவுதொகை கணக்கில் செலவு வைக்கப்படுகிறது. |
| (உ) வெளி நிறுவனங்களிலின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டுள்ள செயத்திட்டங்களுக்கு உரித்தான வருமானம் மற்றும் செலவுகள் ரூபா 33,410,387 தொகையை இணங்கண்டு நிதிக்கூறுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அது முரையாகக் காட்டப்படவேண்டும் | இவ்வாரு வேரு நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட வேலைகள் (PSDG, CBG தவிர) முற்பணமாக வழங்கப்பட்டதால் காசுப்பாய்ச்சலாக கணக்கில் காட்டப்படவில்லை (அது பின்னர் சீர்செய்யப்படுவதால்). இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் எழதாதிருக்க குறைநிரப்பு மதிப்பீடு மூலம் பெறப்பட்டு பின்னர் பெறவேண்டியவைகள் கணக்கறிக்கையில் கடன்பட்டோராக காட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ) 2019 ஆம் ஆண்டில் கைமாற்றப்பட்ட சீதனம் மற்றும் நன்கொடைகள் மூலம் உரிமை மாற்றம் செய்யப்படும் அசைவற்ற சொத்துக்களுக்கான முத்திரை தீர்வை ரூபா 50,829,200 தொகை கிழக்கு மாகாண திறைசேரிக்கு கொடுத்து தீர்க்க வேண்டிய 1% தொகை மற்றும் மாவட்ட உதவி காணிப் பதிவாளர் நாயகத்திற்கு | எதிர்காலத்தில் அது கடைபிடிக்கப்பட வேண்டும். | இவ்வருடம் இத்தொகை வேறாக கணக்கில் அட்டவணை மூலம் காட்டப்பட்டு மிகுதியே கணக்கில் எடுக்கப்படும். அதாவது இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் எழாதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| செலுத்த வேண்டிய ரூபா 137,900 என்பவை உரியவாறு கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டி ருக்கவில்லை. | | |
| (எ) 2003ஆம் ஆண்டில் காணாமல் போன ரூபா.6,860,650 பெறுமதியான தண்ணீர் பவுசர் இயந்திரம் மற்றும் காணாமல் போன நாலு சில்லு உழவு இயந்திரத்தின் பெறுமதி ஏடுகளிலிருந்து அகற்றப்படாமல் தொடர்சியாக நிதிக்கூற்றுக்களிள் சொத்தாக காட்டப்பட்டுல்லது. | தொலைந்து போன சொத்துக்களின் பெறுமதி ஏடுகளிலிருந்து அகற்றப்படல் வேண்டும் | இவற்றுக்கு முறையான பொலிஸ் அறிக்கைகள் இல்லாததாலேயே இவற்றை பதிவழிக்க முடியாத நிலை காணப்படுகிறது. இனிவரும் காலங்களில் பிரதிப்பிரதம செயவாளர் நிதி அவர்களின் அறிவுரையைப் பெற்று பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஏ) 2018 ஆம் ஆண்டு GIZ நிறுவனத்தால் நன்கொடையாக மாநகர சபைக்கு கிடைக்கப்பெற்ற சூரிய மின்கல பிறப்பாக்கியின் பெறுமதி ரூபா 05 மில்லியன் சொத்தாக நிதிக்கூற்றுக்கு கொண்டுவரப் பட்டிருக்கவில்லை. | குரித்த சொத்தின் பெறுமதி நிதிக்கூற்றுக்களிள் சீர் வெய்ய வேண்டும். | தற்போது இதனை இயங்கச்செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இதன் மொத்தப்பெறுமதியும் இவ்வருடம் கணக்கில் எடுக்கப்படும். |
| (ஐ) ரூபா. 25,353,479 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த (கம்பி, சீமெந்து, கல், தார், பொலித்தீன்) போதிலும் பயன்படுத்தப்படாத மூலப் பொருட்களின் பெறுமதி ஆண்டிறுதியில் நிதிக்கூற்றுக்கு கொண்டுவரப்படவில்லை. | களஞ்சிய கணக்கு பேணப்பட வேண்டும். | களஞ்சியக் கணக்கு பேணப்படாததாலேயே இவற்றை கணக்கில் கொண்டுவர முடியாத நிலை காணப்படுகிறது. இருப்பினும் மிகுதியாக பொருட்கள் களஞ்சியத்தில் இருப்பாக காணப்படும். தற்போது களஞ்சியக் கணக்கு நடைமுறைப்படுத்தப்படுவதால் இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் எழாது. |
| (ஒ) காணாமல் போன, பழுதடைந்த நூல் நிலைய புத்தகங்கள் இறுதி இருப்பில் இருந்து கழிக்கப்படாது தொடர்ந்தும் சொத்தாகவே நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | சரியாக அடையாளம் காணப்பட்டு ஏடுகளிள் சீர் செய்ய வேண்டும். | காணாமல் போன, பழுதடைந்த புத்தகங்களின் பெறுமதியானது கடந்த வருடங்களில் பதிவுகள் இன்மையாலும் (பெறுமதியின்மை), விபரங்கள் பெற முடியாததாலும் பதிவழிக்க முடியாதுள்ளது. தற்போது இவை ஒரு மென்பொருள் மூலம் பதிவிடப்படுவதால் இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் எழாது சீர்செய்யப்படும். |
| (ஓ)ஆயுள்வேத வைத்தியசாலையின் மருந்துவகைகளின் இருப்புக்கள் | இறுதிக் கணக்கில் சேர்க்கப்பட வேண்டும். | ஆயுள்வேத வைத்தியசாலை மருந்துப் பொருட்களுக்கான |

| | | |
|---|---|---|
| கணிப்பிடப்பட்டு இறுதிக் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை | | இருப்பு மாதாந்தம் வைத்தியரால் சமர்ப்பிக்கப்பட்டாலும் அவை இறுதிக்கணக்கில் வெளிப்படுத்தப்படவில்லை. இனிவரும் காலங்களில் இதுவும் பட்டியல் மூலம் வெளிப்படுத்தப்படும். |

**1.3.2 ஆவணச்சான்றுகள் இன்மை**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 341,832,339 தொகை பெறுமதியான 05 விடயங்களுக்கு காணி உறுதிகள், சொத்து பதிவேடுகள், உரிமைப்பத்திரங்கள் போன்ற சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய ஆவணங்கள் சான்றுகள் பதிவேடுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இவை அனைத்துக்கும் மதிப்பீட்டு குழு நியமிக்கப்பட்டு குழுவின் மதிப்பீட்டின் அடிப்படையில் மீதமுள்ள தொகையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | சென்மதியாளர்களுக்கு செலுத்தவேண்டிய ரூபா 28,808,920 தொகை தொடர்ச்சியாக 05 ஆண்டுகளுக்கு மேலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளபோதிலும், குறித்த சென்மதியாளர்களின் தகவல்கள் இல்லாத நிலையில் இம் மீதிகளை உறுதிப்படுத்த முடியாத நிலையில் உள்ளது. | தீர்க்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இம் மீதிகள் பற்றி தகவல்கள் பல ஆண்டுகளாக இல்லாத நிலையில் இனிவரும் காலத்தில் தீர்வு செய்யப்படும் |
| (இ) | முற்பண களஞ்சிய கணக்கு 2018 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து முன்கொணரப்பட்ட களஞ்சிய இருப்பு மீதி ரூபா 57,413,793 தொகை காணப்படுகின்ற போதிலும், இத்தொகைக்கு ஈடான களஞ்சிய பொருள் விபரங்கள் சபையில் காணப்படவில்லை இதன் காரணமாக இத்தொகையினை உறுதிப்படுத்த முடியாதிருக்கின்றது. | பொருள் விபரங்கள சமர்ப்பிக்கப்பட வேண்டும். | தற்போது 31.12.2019 இல் களஞ்சியப் பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு அவற்றில் கூடியளவு பொருட்களுக்கான பெறுமதியும் இடப்பட்டு மொத்தப் பெறுமதி பெரப்பட்டுல்லது. இருப்பினும் சிலவற்றுக்கு பெருமதி மதிப்பிடாமையால் அவற்றினதும் பெருமதி மதிப்பிடப்பட்டு தற்போது 2020 ஆண்டிலிருந்து கணக்கீடப்பட்டு களஞ்சியக் கணக்கு மீண்டும் அமுள் படுத்தப்படும். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | | |
| (அ) இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின நிதிப்பிரமாணம் | | | | |
| (i) நிதி ஓழுங்கு விதி 571 | 3,721,196 | இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக கணக்குகளில் காட்டப்பட்டுவரும் வைப்புக்களை கொடுத்து தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி ஓழுங்கு விதிகள் படி நடசடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை |
| (ii) நிதி ஓழுங்கு விதி 1645 | | வாகன ஓட்ட பதிவேடு மற்றும் மாதாந்த பொழிப்பு மாதாந்தம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுவதில்லை | சரியான நடைமுறையை பின்பற்ற வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை |
| (ஆ) இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் பெறுகைகள் வழிகாட்டி 2.11.1 (இ) பிரிவு | | 04 உழவு இயந்திரங்கள், 02 காவேஜ் கொம்பக்டர்கள் மற்றும் மினி எக்ஸவேற்றர் ஆகியவற்றின் கொள்வனவின் போது பெறுகைக் முன்னாயத்தக் (pre bids meeting) கூட்டங்கள் எதுவும் நடாத்தப்பட்டி ருக்கவில்லை | சரியான பெறுகைகள் வழிகாட்டி நடைமுறையை பின்பற்றப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 87,466,270

ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 95,843,811 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான முகாமைத்துவம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை கள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை கள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 31,500,000 | 58,757,243 | 41,232,501 | 17,524,742 | 23,800,000 | 47,230,435 | 20,541,050 | 26,689,385 |
| வாடகைகள் | 22,850,100 | 28,351,378 | 12,534,754 | 15,816,624 | 28,750,100 | 30,374,729 | 14,015,125 | 16,359,604 |
| அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 11,640,000 | 13,427,672 | 10,683,589 | 2,744,083 | 11,145,000 | 13,036,787 | 10,949,115 | 2,087,672 |
| ஏனைய வருமானம் | 101,405,000 | 4,296,569 | 3,678,961 | 617,608 | 89,385,000 | 4,591,291 | 3,944,722 | 646,569 |
| மொத்தம் | **167,395,100** | **104,832,862** | **68,129,805** | **36,703,057** | **153,080,100** | **95,233,242** | **49,450,012** | **45,783,230** |

### 2.2.2 சோலை வரி

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் பிரதேச 42,477 அசைவற்ற ஆதனங்களில் மீது வீதவரி கணிப்பிடப்படாது, 38,476 அசைவற்ற ஆதனங்கள் மீது மாத்திரம் வீதவரி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. | இரட்டை பதிவு கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டும். | ஆதனங்களின் எண்ணிக்கையில் சில ஆதனங்கள் இரட்டைப் பதிவாகவும் சில மாநகர கட்டளைச்சட்டத்திற்கு அமைய பதிவுசெய்யப்படாமலும் உள்ளது. எனவே இவற்றை சீர்செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எதிர்வரும் காலத்தில் இக் குறைபாடுகள் சீர்செய்யப்படும். |

| | | |
|---|---|---|
| (ஆ) வீத வரி அரவிடுவதற்காக 2012 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஆதனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | புதிய ஆதன மின்மதிப்பீடு விரைவில் செய்யப்பட வேண்டும். | புதிய ஆதன மீள் மதிப்பீடானது எதிர்வரும் காலங்களில் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |

**2.2.3 உல்லாச விடுதிகளின் வருமானம் மீதான தீர்வை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபையின் அதிகார எல்லைக்குள் உல்லாச ஹோட்டல்கள் மீதான வரி அறவிடப்பட வேண்டிய தொகை கணக்கீடு செய்யப்பட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஹோட்டல்கள் மீதான வரி முறையாக அறவிடப்பட வேண்டும் | தங்களால் அனுப்பப்பட்ட உல்லாச விடுதிகளின் வருமானம் தொடர்பான நிலுவை அறவீட்டு விபரம் குறித்த உல்லாச விடுதிகளுக்கு 03.09.2019ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் 1%அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.2.4. முத்திரை தீர்வை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தினால் 2016, 2017 மற்றும் 2018 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் நேரடியாகவும் நடமாடும் சேவைகள் மூலமாகவும் அறவிட்ட மேலதிக முத்திரை தீர்வையை கணிப்பிட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முத்திரை தீர்வையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடமாடும் சேவை மூலம் மேலதிகமாக அறவீடு செய்யப்பட்ட ஆதனப்பெறுமதிக்கான முத்திரைத் தீர்வையை மீளளிக்கும் படி எம்மால் 2019.05.22 அன்று கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

**3. செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) உப விதிகள்<br>மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 272 ஆம் பிரிவின் பிரகாரம், முக்கியமான விடயங்களுக்கான உபவிதிகள் எதுவும் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முக்கியமான விடயங்களுக்கான உபவிதிகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாகாண சபை கூட்டப்பட்டதன் பின்னர் அவற்றுக்கு அங்கீகாரம் பெறுவதற்கான நடவடிக்கை எம்மால் மேற்கொள்ளப்படும். |

| | | |
|---|---|---|
| (ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்<br>-----------------------------------------------<br>மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 272 ஆம் பிரிவின் பிரகாரம், உப விதிகள் தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் சபையினால் செயல்பாடுகள் நடைமுறைப்படுத்த வேண்டியபோதிலும், வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பொருத்தமாக தயாரிக்கப்பட்டு அவை செயற்படுத்தப்பட வேண்டும். | எமது அனைத்துக் கிளைகளிலும் வருடாந்த செயற்திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்படுகின்றது.மேலும் உபவிதிகளை அடிப்படையாகக் கொண்ட வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை எதிர்காலத்தில் இதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) திண்மக்கழிவு முகாமைத்துவம்<br>-----------------------------------------------<br>திருப்பெருந்துறையில் திண்மக்கழிவு முகாமைத்துவத்தை சிறந்த முறையில் சூழலுக்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் முன்னெடுத்துச் செல்ல 2016 ஆம் ஆண்டு ரூபா 616,090 காசுத் தொகையும் 2018 இல் ரூபா 50 மில்லியன் பெறுமதியான ஒரு Land Cruiser வாகனம் UNOPS நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளதுடன் இந்நிதி இந் நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது ரூபா 541,090 வைப்புக் கணக்கிலிடப்பட்டுள்ளது.<br>செலவிடப்பட்ட ரூபா 75,000 வேறு நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. | திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கு வழங்கப்பட்ட நிதியை தொடர்புடைய நோக்கங்களுக்காக பயன்படுத்தவேண்டும். | UNOPS நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ள ரூபா.616,090.00 இல் ரூபா.75,000.00 எமது மாநகர சபையின் இணையத்தளம் உருவாக்குவதற்காக பயன்படுத்தப்பட்டது. மிகுதித் தொகையான ரூபா 541,090 வானது தற்போது திண்மக் கழிவு செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதன் தற்போதய நிலுவைத் தொகை ரூபா 395,494.09 ஆகும். |
| (ஈ) சுற்றுச் சூழல் பிரச்சணை<br>--------------------------------------<br>சக்கர் இயந்திரத்தின் (Sucker) மூலம் சேகரிக்கப்படும் மனிதக்கழிவுகள் சபைக்கு சொந்தமில்லாத திருப்பெரும்துறையில் அங்கீகரிக்கப்பட்ட சுத்திகரிப்பு முறைகளுக்கு மாறாக கொட்டப்படுவதினால் மட்டக்களப்பு வாவி மற்றும் சூழலும் மாசடைகின்றது. | முறையான சுத்திகரிப்பு முறைப்படி திண்மக்கழிவுகள் அகற்றப்படவேண்டும் | குறித்த கழிவுகள் கொட்டும் இடமானது ஜப்பான் நிறுவனம் ஒன்றினால் உரிய தொழில்நுட்ப முறைகளுக்கமைவாக எமது சபைக்கு பொறுப்பளிக்கப்பட்டதுடன் இது தொடர்பில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபையிடமிருந்து காலத்திற்குக் காலம் அறிக்கை பெறப்பட்டு அவர்களது சிபார்சுகளுக்கமைய உரிய முறையில் எம்மால் பேணப்பட்டு வருகிறது. |

(உ) எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை அடைவதற்கு தவறியமை

| | | |
|---|---|---|
| உயிர்வாயு தயாரிப்பு மற்றும் வைத்தியசாலைக் கழிவுகளை எரியூட்டலுக்காக முறையே ரூபா 02 மில்லியன் மற்றும் ரூபா 03 மில்லியன் செலவிடப்பட்டுள்ள போதிலும் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை (Out come) அடைந்து கொள்ளமுடியாதிருந்த சந்தர்ப்பங்கள் | சரியான சாத்தியவள ஆய்வு செய்திருக்க வேண்டும். | தற்போது உயிர்வாயு தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பினும் அதனை நடைமுறைப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. காரணம் எம்மால் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு வழங்குவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டு அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்ட போதிலும் அவர்களிடமிருந்து பதில் கிடைக்கப்பெறாததால் எம்மால் பொதுமக்கள் எதிர்ப்பு காரணமாக இதனை பொருத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. |

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இரண்டாவது சுகாதார அபிவிருத்தித் திட்டத்தின் (2nd HSDP) நிதியளிப்பின் கீழ் 2014 தனியார் வைத்தியசாலைகளின் கழிவுகளை எரியூட்டுவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,624,800 பெறுமதியான Medical waste Incinerator உபகரணம் பொருத்தமான இடம் தெரிவு செய்யப்படாமை காரணமாக கடந்த ஆறு வருட காலமாக கணக்காய்வுத் திகதி வரை பாவனையற்று காணப்படுகின்றது. | குறித்த கழிவுகளை எரிப்பதற்கான இயந்திரத்தை குறித்த நோக்கத்துக்காக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் | விளக்கமளித்து தற்போது வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவதற்கான பொறியியலாளர் சீனா நாட்டைச் சேர்ந்தவராதலால் இவர் எமது நாட்டில் இருந்த வேளையில் இவற்றை நிர்மாணிக்க முடியாமல் போனமையினால் தொடர்சியாக நடைமுறைப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. |
| (ஆ) | மாநகர எல்லைக்குட்பட்ட தனியார் காணியை உப பிரிகை செய்து விற்பனை செய்வதாயின் அதில் குறித்த ஒரு பகுதி மாநகர சபைக்கு பொது வசதிகளுக்காக ஒப்படைக்கப்படுதல் வேண்டும். இவ்வாறு மாநகர சபைக்கு ஒப்படைக்கப்பட்ட 97 பேர்ச் அளவான | இது தொடர்பாக விசாரணைகள் நடாத்தப்படவேண்டும் | இத்தகைய சம்பவம் பல வருடங்களுக்கு முற்பட்டது என்பதால் இதனை ஆராய்வதற்கு கால அவகாசம் தேவைப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | பல மில்லியன் ரூபா பெறுமதி வாய்ந்த ஐந்து காணிகள் முன்னாள் ஆணையாளரினால் தனது மனைவியின் பெரிலும் தனது பெயரிலும் 2003 - 2006 காலப்பகுதியில் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருந்தன. இவ்விடயம் எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக சபை எந்தவொரு நடவடிக்கையினையும் எடுத்திருக்கவில்லை. | | |
| (இ) | சுமார் இரண்டு மில்லியன் ரூபா செலவில் உக்கக்கூடிய (Degradable waste) கழிவிலிருந்து (Bio Gas) உயிர் வாயு தயாரிப்பு, சேதனப்பசளை தயாரிப்பு, திண்மக்கழிவு முகாமைத்துவம் போன்ற நன்மைகளை உள்ளடக்கியதாக Bio Gas Plant ஒன்று 2018 பெப்ரவரியில் கட்டி முடிப்பதற்காக மாநகர சபை முதல்வருக்கும் குரிப்பிட்ட நிறுவன பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கும் இடையே ஒப்பந்தம் 2018 பெப்ரவரியில் கைச்சாத்தாகி 2018 செப்ரம்பரில் வேலைகள் முடிவடைந்துள்ள போதிலும் இதுவரை Bio gas உற்பத்தி செய்யப்படவில்லை. | உயிர் வாயு விரைவில் தயாரிக்கப்பட வேண்டும். | Bio gas Energy நடவடிக்கையானது 2018 பெப்ரவரி 19 தொடக்கம் உற்பத்தியாக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்ட போதிலும் இச்செயற்திட்டத்தின் முதல் கட்டமாக 1000 KG பசுஞ்சாணம் ஒரேதரத்தில் சேர்க்கப்பட வேண்டும். பசுஞ்சாணத்திற்கு தட்டுப்பாடு நிலவுவதால் இதனை சேகரிப்பதில் காலதாமதங்கள் ஏற்படுகின்றது. இதனால் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமங்கள் காணப்பட்டது. இத்திட்ட முன்மொழிவில் கூறப்பட்டது போல இவ் இலக்கை அடைவதற்கு முடியாமல் போனாலும் இனிவரும் காலங்களில் எம்மால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஈ) | மாநகர சபை கட்டளைச்சட்டம் (Cap 252) பிரிவுகள் 185 மற்றும் 186 இன் பிரகாரம், வகைப்படுத்தப்படாத வரவுகள் சபை நிதியத்தில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமே தவிர, ஏற்பாடுகள் அல்லாத செலவுகள் சபை நிதியத்தில் சாட்டுதல் செய்ய முடியாதுள்ள போதிலும், 2019 ஆம் ஆண்டில் முற்பணங்களாக காட்டப்பட்ட பட்டோலைகளில் எந்தவொரு சனசமூக நிலையங்களுடன் சபை கொடுக்கல், வாங்கல்களில் ஈடுபடாத | இது கட்டளைச்சட்டங்களுக்கு முரணானது. | மாநகர சபையின் கட்டளைகள் சட்டத்தின் பிரிவு 40 (அ) விதிகளின்படி சில பொருட்கள், மனித வளம் மற்றும் வாகனங்கள் வழங்கப்பட்டன. |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், சபையின் எல்லைக்குட்பட்ட 14 சனசமூக நிலையங்களுக்கு கணக்காய்வுத் திகதி வரை ரூபா 12,620,559 தொகை முற்பணங்கள் சீராக்கம் செய்யப்பட்டதற்கான (No Cash) பற்றுச்சீட்டுக்கள் (ம.மா.ச.47) மாநகர சபையினால் வழங்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | மாநகர சபையினுடைய இரண்டு நடைமுறைக் கணக்குகளில் மாதாந்தம் மிகையாக காணப்படும் வரவு மீதிகளின் அடிப்படையில், உத்தேசிக்கப்பட்ட பெறுவனவும் மற்றும் கொடுப்பனவுகளை கணக்கிட்டு அதற்கேற்றவாறு காசு மீதி இருப்பின் மிகுதித் தொகையினை நிலையான வைப்புக்களில் அல்லது இலங்கை வங்கி Overnight கணக்கினையும் மற்றும் மக்கள் வங்கியில் Saving Corporation கணக்கினையும் நடைமுறைப்படுத்தியிருந்தால் சபையானது 2018 ஆம் ஆண்டு ரூபா 6,773,164 தொகையும் 2019ஆம் ஆண்டு ரூபா. 7,126,252 தொகையினையும் வட்டி வருமானமாக உழைத்திருக்கும். மேற்படி வருமான மூலங்கள் இனங்காணப்படாததினால் சபையானது ரூபா 13,899,416 தொகை வட்டி வருமானத்தை இழந்துள்ளது. | மேலதிக காசு முதலீடு செய்யப்படல் வேண்டும். | சபையில் பேணப்படும் இரண்டு நடைமுறைக் கணக்குகளும் வங்கியுடன் கலந்தாலோசித்து எதிர்காலத்தில் மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ) | கிழக்கு மாகாண சபையால் வழங்கப்பட்ட குறித்தொது க்கப்பட்ட நோக்க மூலதன மானியம் (CBG) அடிப்படையில் ரூபா 10,435,141 தொகை பெறுமதியான நிதி குறித்த நோக்கத்தினை நிறைவு செய்யாது 04 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக வங்கி நடைமுறைக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது. | பலன் கிடைக்கும் வகையில் காசு முதலீடு செய்யப்படல் வேண்டும். | கடந்த பல வருடங்களாக குறித்த தொகையானது குறித்த நோக்கத்தை நிறைவு செய்த போதிலும் இவ்வாறு மிகுதி காணப்படக் காரணம் மதிப்பீட்டுத் தொகையை விட வேலை குறைவாக மேற்கொள்ளப்பட்டமை அல்லது ஒப்பந்தம் மேற்கொள்ளும் போது போட்டி அடிப்படையில் குறைவாக பெறப்பட்டதால் ஏற்பட்ட சேமிப்பாகவும் காணப்படலாம். எது எவ்வாறிருப்பினும் இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் எழாதிருக்க நடவடிக்கை எடுப்பதுடன் அடுத்த வருடம் இது சபை |

| | | |
|---|---|---|
| | | அனுமதியுடன் பொதுக்கணக்கிற்கு மாற்றப்பட்டு திரண்ட நிதியுடன் சேர்க்கப்படும். |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 126 பதவிகளுக்கு வெற்றிடமும் மற்றும் 13 மேலதிக ஆளணிகள் தொடர்பில் சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்கள் விரைவாக நிரப்பப்படவேண்டும் மற்றும் மேலதிக ஆளணிக்கு அனுமதி பெறவேண்டும் | எமது அலுவலகத்தினால் மாதாந்தம் பதவி வெற்றிடம், மிகை தொடர்பான ஆளணி அறிக்கை கிழக்கு மாகாண உள்@ராட்சி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்படுவதுடன், வெற்றிடத்திற்குரிய அலுவலர்களை நியமிக்கக் கோரி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.3 இணங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கிழக்கு மாகாண சபையால் 2019 ஆம் ஆண்டு மாகாண விசேட அபிவிருத்தி நன்கொடையின் அடிப்படையில் (PSDG) சத்துருக்கொன்டான் ஓசானம் வீதி ரூ.5.25 மில்லியனுக்கு அபிவிருத்தி செய்ய அனுமதிக்கபட்டிருந்து. எனினும் மீளாய்வு ஆண்டில் அதற்கான கட்டுநிதியாக ரூ.5,070,450 தொகை கொங்கீறீட் கலவை (Ready mix) 283M$^3$ அளவுகள் பாவிக்கபட்டதாக முற்பணக்கணக்கு சீரக்கம் செய்யபட்டிருந்தது. ஆனால் பொறியியலாளரின் அறிக்கையின் பிரகாரம் மேற்படி வீதிக்கு 210M$^3$ கொங்கிறீட் கலவை மட்டுமே பாவிக்கபட்டதாக அறிக்கை இடப்பட்டுள்ளது. இவ் ஆவணங்களின் அடிப்படையில் 75M$^3$ கொங்கிறீட் கலவைக்கான ரூபா 989,541 தொகை மேலதிகமாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது. | கொடுப்பனவுகள் வழங்கும் போது வரும் காலங்களில் அவதானம் கடைபிடிக்கப்பட வேண்டும். | PSDG வேலைத்திட்டத்தின் கீழ் ஓசானம் வீதிக்காக 283m$^3$ அளவு Readymix முற்பணம் சீர்செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் பொறியியலாளரின் வேலைமுடிவு அறிக்கையின் படி (Job Sheet) 324m$^3$ பாவிக்கப்பட்டுள்ளது. எனவே மிகுதி இன்னும் கொடுப்பனவு செய்யவேண்டியுள்ளது. |

### 3.3.1 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டு GIZ நிறுவனத்தால் நன்கொடையாக மாநகர சபைக்கு வழங்கப்பட்ட 6.125Kw சூரிய மின்கல பிறப்பாக்கி பொருத்தப்பட்டு பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்றது. | உரிய காலத்தில் திருத்தப்பட வேண்டும். | இடி, மின்னல் தாக்கம் காரணமாக இச் சூரிய மின்கலம் இயங்காமல் காணப்பட்டதன் காரணமாக இதனை திருத்துவதற்காக உரிய கம்பனிக்கு தற்போது அனுப்பப்பட்டுள்ளது என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன். |

### 3.3.2 வாகன பராமரிப்பு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ)சபையில் காணப்பட்ட 77 எண்ணிக்கையான வாகனங்களில் 24 வாகனங்கள் செயற்பாட்டில் காணப்படவில்லை. இவற்றை செயற்படு நிலைக்கு கொண்டு வருவதற்கு அல்லது இவற்றை வேறு நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்படு நிலையில் இல்லாத லாகனங்கள் திருத்தம் செயிது செயற்படு நிலைக்கு கொண்டு வருவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். | 77 வாகனஙகளில் 7 வாகனங்கள் ஏலவிற்பனைக்காக தயார்படுத்தப்பட்டுள்ளது. 22 வாகனங்கள் இடையிடையே பாவிக்கப்படுகிறது. ஏனையவை முழுமையாக பாவிக்கப்படுகிறது. |
| (ஆ)சபையில் இயங்கு நிலை மோட்டார் 48 வாகனங்களுக்கு 03 ஆண்டுகளுக்கு மேலாக எரிபொருள் பாவனைச்சோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் பாவனை செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அனைத்து வாகனங்களுக்கும் எரிபொருள் பாவணைச் சோதனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையில் உள்ளக | உள்ளக கணக்காய்வு | மீளாய்வாண்டில் ஓரளவான |

| | | |
|---|---|---|
| கணக்காய்வு நடவடிக்கைகள் முறையாக நடைபெற்றிருக்கவில்லை | செயற்பாட்டினை முறைபடுத்தப்பட வேண்டும். | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் இடம்பெற்றது. |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை. | நான்கு கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். | கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இவ்வருடம் 03 கூட்டங்கள் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது. |

**4.3 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வு பந்திகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபையினால் 2018 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கைகளில் சுற்றிக்காட்டப்பட்ட 1.6.1(ஆ), 1.6.2, 2.2.2.1, 2.2.2.2 மற்றும் 3.1 ஆகிய சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் குறித்து எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொது மக்களின் வரிப்பணத்துக்கு ஏற்பட்ட நட்டங்கள் உடனடியாக அறவிடப்பட வேண்டும். | தங்களால் குறிப்பிடப்பட்ட தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வு பந்திகள் இவ்வருடம் தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்கப்படும் |